**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**<u>2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 07 ம் நாள் திங்கட்க்கிழமை</u>**

<u>O.S.76/2024</u>

வாதி தரப்பு சாட்சியாகிய PW1-ன் வாக்குமூலம் (1969 -ம் ஆண்டின் 44 -வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துவேல் | தாலுக்கா | : | திருவாரூர் |
| த/பெ | : | பாலகிருஷ்ணன் | கிராமம் | : | விளமல் |
| ஜாதி | : | | தொழில் | : | மென்பொருள் நிறுவனம் |
| சமயம் | : | | வயது | : | 48/25 |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டதாகும். அதில் கண்டுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

கடந்த 04.08.2021 தேதியிட்டு தாவா சொத்தை பொறுத்து எனது தாயார் கெங்கையம்மாள் எனக்கு எழுதிக்கொடுத்த தான **செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1** ஆகவும், கடந்த 18.12.2021 தேதியிட்ட தாவா சொத்திற்கான **பட்டா மாறுதல் உத்தரவு - கணினி நகல் வா.சா.ஆ.2 ஆகவும்,** கடந்த 07.08.2024 தேதியிட்ட தாவா சொத்திற்கான **நில உரிமை விவரம் - கணினி நகல் வா.சா.ஆ.3** ஆகவும், தாவா சொத்திற்கான **அ பதிவேடு கணினி நகல் வா.சா.ஆ.4** ஆகவும், கடந்த 16.02.2024 தேதியிட்ட தாவா சொத்திற்கு **வரி செலுத்தியதற்கான ரசீது**

**கணினி நகல் வா.சா.ஆ.5** ஆகவும், தாவா சொத்தின் அமைப்பை காட்டக்கூடிய **புகைப்படம் மற்றும் குறுந்தகடு - அசல் வா.சா.ஆ. 6** ஆகவும், (Bharatiya Sakshya Adhiniyam (BSA), 2023 Sec. 63(4)(c) கீழ் சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை. விசாரணை காலத்திற்குள் தாக்கல் செய்வதாக வாதி தரப்பு உறுதிமொழியை தொடர்ந்து ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) கடந்த 01.01.1975 முதல் 06.08.2024 தேதி வரையிலான தாவா சொத்திற்கான **வில்லங்க சான்றிதழ் - கணினி நகல் வா.சா.ஆ.7** ஆகவும், கடந்த 17.08.2024 தேதியில் என்னால் **வைப்பூர் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் - கை நகல் வா.சா.ஆ.8** ஆகவும், கடந்த 17.08.2024 தேதியில் என்னால் கொடுக்கப்பட்ட புகாருக்காக **கணினி வழி பெறப்பட்ட ஒப்புகை ரசீது - கணினி நகல் வா.சா.ஆ.9** ஆகவும், எனது ஆதார் **அட்டை நகல் அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது வா.சா.ஆ.10** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

//கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.//

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.07.06 15:01:56 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

திருவாரூர்.